ஆண்டு சந்தா ரூ. 7. தனிப் பிரதி அணா 2. சிலோன் 15 சதம் REGD. NO 4642

திராவிடநாடு

மலர் 11. 14—12—52 இதழ் 24

"பணத் தோட்டம்" கண்டேன்!

மூன்று ஊர்களைக்காணும் சந்தர்ப்பம் பெற்றேன்! ஊர்களா அவை?— அல்ல, அல்ல!—பணத் தோட்டங்கள். பம்பாய் மாகாணத்துக்குள் நுழைந்ததும் தென்பட்டது, ஷோலாப்பூர். பம்பாய் நகரைத் தாண்டி வடக்கில் 300 மைல் சென்றதும், கண்டேன் ஆமதாபாத்தை. வளைந்து ஓடும் புகைக் கூட்டம், மேகங்களைப் போல் கப்பிக் கொண்டிருக்கும் இந்த மூன்று ஆலைநகரங்களையும் காணும்போது மனம் பிரமித்தது! 'ஆடு ராட்டே! சுழன்றாடு ராட்டே!!' என்று போதித்த உத்தமர் காந்தியாரின் இருப்பிடமாகயிருந்த சபர்மதி ஆசிரமத்துக்கும் சென்றேன். அது, ஆகமதாபத்துக்கு அருகில் 4 மைலில் தான் இருக்கிறது. அங்கே, ராட்டையின் ஒலி கேட்டு மகிழ்ந்த உத்தமர் வாழ்ந்தபோது, உருவானவை தான் இத்தனை ஆலைகளும் என்று எண்ணியபோது, வேடிக்கையாயிருந்தது எனக்கு. சபர்மதிக் குருவுக்கு ஒரு காதையும் ஆலைச் சங்குக்கு மற்றோர் காதினையும் அளித்துவிட்டு, ஆலைகளைக் கட்டினார்கள், அதிபர்கள். தலைவராம் காந்தியடிகளின் போதனை கேட்டு, சும்மாயிருந்து விடவில்லை. "அவர் அப்படித்தான் சொல்வார். நாம் நம் காரியத்தைதான் பார்க்கவேண்டும்" என்று ஆலைகளைக் கட்டினர். அதன் புகை வானத்தையளாவுவதுபோல, தமது கீர்த்தியை உலகெங்கும் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்! கீர்த்தியை மட்டுமா, தம் பாதங்கள், இந்தப் பாரதமாதாவின் உடல் முழுவதிலும் அழுந்திக்கிடக்கின்றன. 'அரவிந்த்'மில், 'காலிகோ'மில் போன்ற, வேஷ்டிகளைத் தயாரிக்கும் ஆலைகள்... அப்பப்ப! மலைக்கச் செய்யும். இந்த ஆலைகளின் அதிபர்கள்தாம், ஆமதாபாத் காங்கிரஸ் தலைவர்களாம். அதனையறிந்தபோது, சபர்மதிக்கு அருகே வளர்ந்திருக்கும் ஆலையூர் பற்றிய சிந்தனை அதிகரித்தது.

'ஆலைகள் அதிகரிப்பது ஆகாது! கூடாது!' என்பதல்ல, நம்முடைய கொள்கை. ஆனால், அந்த ஆலைகள், காந்தியடிகளின் பேருரையைக் கேட்கும் வாய்ப்பு பெற்ற வடநாட்டுப் பகுதியில் அதிகமிருப்பதும்; அவரது சொற்களைப் படிக்கும் வாய்ப்புபெற்ற தெற்கில் குறைந்திருப்பதும் என்ன காரணம் என்பதை எவரும் நினைக்காமலிருக்க முடியாது.

ஆலையூர்கள் அவை! இரவு நேரத்தில், அந்த ஊர்களைப் பார்க்கும் போது, எவ்வளவு விஞ்ஞான விந்தைகள் தென்படுகின்றன தெரியுமா? ஷோலாப்பூர்—பம்பாய்—ஆமதாபாத். ஆலையரசு தர்பார் நடாத்தும் பணத் தோட்டங்கள், இவை! இந்த ஆலைகளின் அதிபர்கள் யாவரும், வடநாட்டவர்தான். ஆனால், 'தென்னாட்டவர் எவருமே அங்கே இல்லையோ?' என்று கேட்கிறீர்களா! "இருக்கிறார்கள்! ஏராளமாக இருக்கிறார்கள்! அகமதாபாத்தில்மட்டும் 8000 பேர் இருக்கிறார்கள்!! அத்தனைபேரும் ஆலையில் உழைத்து உருக்குலையும் தொழிலாளர்கள்". நம்மவர் உடம்பை உருக்கிப் பணத் தோட்டத்தை வளரச் செய்துகொண்டிருக்கிறார்கள்! பம்பாய் நகரத்தில் மட்டும், ஆலைகளிலும் மற்ற வேலைகளிலும் ஈடுபட்டுக் கிடக்கும் நம்மவர் தொகை இரண்டு லட்சம் இருக்குமாம்.

தன்னிடத்தை விட்டுச் சென்ற நம்மவர், அங்கே—கூலிகள் உழைத்து வாழ்பவர்கள்!!

ஆனால், அங்கிருந்து இங்கே வந்திருப்போர், சேட்ஜீக்கள்! டால்மியாக்கள்!!

இந்த விசித்திரத்தை, ஆலையூர் காணும் நம்மவர், சிந்திக்காமலிருக்க முடியாது. மூன்று பணத் தோட்டங்களையும் நான் கண்டபோது, பதறிப்போனேன். ஒரு சமயம் தேசியக் கவி பாரதியார், தனது நண்பர் நெல்லையப்பருக்கு கடிதம் தீட்டினாராம். "நண்பா! என் தமிழகத்தைவிட இன்னொரு இடம் சிறப்பாக இருப்பதைக் கண்டால் எனக்குப் பொறுக்கவில்லை. என், மண்ணைவிட இன்னொரு மண்ணில் வாழ்வோர் ஒய்யாரமாக இருப்பதைக் கண்டால் என்னால் சகிக்க முடியவில்லை" என்பதாக. அந்த வரிகள், எனக்கு ஞாபகத்துக்கு வந்தன. பம்பாயில் நான் கண்ட ஊர்களைப்போல நமது அகத்தில் ஒரு ஆலையூரையும் காட்டமுடியாது. ஆலைகள் என்றால் ஒன்று, இரண்டா, 50, 90, 100 இதுதான் விபரம் கேட்டால் கிடைக்கிறது! வேதனை ஏற்படாமலா இருக்கும்? அதுவும் எங்கே! உத்தமர் காந்தியின் போதனை அடிக்கடி ஒலித்த இடத்திலே. அவரது போதனைகளைக் கேட்டனர்—ஆனால் அதே நேரத்தில் 'ஆலையரசை' அமைத்துக்கொள்ளவும் தவறவில்லை. அதனால்தான், இன்று பணத்தோட்டத்தின் அதிபதிகளாகவும் இருக்கிறார்கள்—காங்கிரஸ் தலைவர்களாகவும் விளங்குகிறார்கள்.

ஆனால், "ஆடுராட்டே!சுழன்றாடு ராட்டே!!" என்றபாட்டைப்பாடியதோடு அல்லாமல், அதுவே தாரக மந்திரம் என்று ஆலைகளை வெறுத்தும் அலட்சியப்படுத்தியும், வடவருக்கு விட்டுக்கொடுத்த 'நம்மவர்' வாழும் தென்னாடு, சிறப்பிழந்து கிடக்கிறது! வதைகிறது — வாடுகிறது.

விஞ்ஞானம் அரசோச்சும் இந்த நாட்களில், ஆலைகளுக்குள்ள செல்வாக்கு கொஞ்சநஞ்சமல்ல. ஆலை பெருத்தோரே இன்று உலகத்தை ஆள்கிறார்கள்! பம்பாய் நகரத்தில் நான் பல இடங்களைப் பார்த்த போது, பத்திரிகை ஆபீசுகளைப் பார்த்தால் டால்மியாவின் பெயர்! மின்சார சப்ளை யாருடையது என்றால் டாடாவின் பெயர்! 'இந்த மாளிகை எவருடையது?' என்றால் பிர்லாவின் பெயர்! — இவ்விதம் எதற்கெடுத்தாலும் ஆலையரசர்களின் பெயரைத்தான் கூறினார்கள். 'மலபார்ஹில்ஸ்' என்றோர் அழகான குன்று இருக்கிறது, பம்பாயில்! அங்கே 'மவுண்ட்பிளஸண்ட்' என்றோர் இடம். அங்குதான் மாவீரர் ஜின்னா உலவிய மாளிகை இருக்கிறது. அதற்கடுத்தாற்போல்கொஞ்சதூரம் தாண்டினால் பிர்லாவின் உல்லாச மாளிகை. இங்குதான் சர்தார் படேலின் கடைசி நாட்கள் கழிந்தன! அங்குதான் காந்தியார் போன்றோர் வந்து தங்கியதும்!—அரசியல் தலைவர்களையெல்லாம் தம் மாளிகையில் வாழ வருமாறு செய்யுமளவுக்கு, ஆலையதிபர்கள், வளர்ந்து கிடக்கிறார்கள் அங்கே. பிர்லாவும் டாடாவும் டால்மியாவும்—இன்று டில்லியையே ஆட்டிப்படைக்கிறார்கள்! அவர்களைத் தாலாட்டும் ஆலையூர்களைப் பார்க்கும்போது, வளர்ந்திருக்கும் வடநாட்டு ஆதிக்கம், நன்றாகத் தென்படும். பம்பாய்நகர முழுமைக்கும் மின்சாரம் சப்ளை செய்யும் கம்பெனி டாடாவைச் சேர்ந்ததாம். சர்க்காருடைய ரயில்களை ஓடச்செய்யவும், டாடாவின் தயவுதான் தேவை அங்கு. ஒரு சிறிது தகராறு செய்தால், நகரமே இருட்டாகிவிடும்! மின்சார ரயில்களே ஓடாது! அந்தளவுக்குபணதிபத்யம், வளர்ந்து கிடக்கிறது பம்பாயில். வளர்ந்ததோடுமட்டுமல்ல. தன்னுடைய அகண்ட பாதங்களைத் தென்னாட்டின்மீது வைத்து அழுத்திக்கொண்டுமிருக்கிறது. தென்னாட்டை எடுத்துக்கொண்டு பார்த்தால், இங்கும் அவர்களது ஆதிபத்யத்தைத்தான் காண்கிறோம்—இல்லையெனில் டால்மியாபுரம் ஏற்படுமா? இருக்கத்தான் முடியுமா! சௌகார்பேட்டை — இங்கே! 'லால்ஜீ'க்கள் இங்கே! மாடமாளிகைகள் கட்டிக் கொண்டு வாழ்வோராக அவர்கள்! ஆனால், இங்கிருந்து ஆலையூர்களுக்குச்சென்று வாழும் திராவிட மறவரோ, உழைத்து உழைத்துச்செத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆலைக்குள் புகுந்து எட்டுமணி நேரம் வேலை செய்துவிட்டு, பக்கத்திலிருக்கும் 'சாயா' கடையை நோக்கித் தள்ளாடித் தள்ளாடி அந்த ஜீவன்கள் நுழையும் காட்சியைக் காணும்போது, கண்ணீர் சிந்தச் செய்யும்! கல்மனதையும் கரையச் செய்யும்!

(5-ம் பக்கம் பார்க்க)

புயலின் கொடுமைக்கு ஆட்பட்டோர்க்கு உதவி

பொதுச் செயலாளர் அறிக்கை

"அண்மையில் வீசிய புயலின் காரணமாக தமிழகத்தில் தஞ்சை திருச்சி மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு பல குடும்பங்கள் தாங்கொணா வேதனை நிலை பெற்றுள்ளன. இதுவரை கிடைத்திருக்கும் செய்திகளிலிருந்து நூற்றுக்கு மேற்பட்டோர் உயிரிழந்திருக்கிறார்கள். பத்துகோடி ரூபாய்க்குமேல் நஷ்டமேற்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. இன்னும் சரியான கணக்குகள் வரவில்லை. வர இருக்கும் கணக்கும் நமது மனவேதனையை அதிகப்படுத்தும் அளவுக்குத்தான் இருக்கமுடியும். வீடிழந்தோர்—வீதியில் நிற்போர்—இந்தத் தொகையை எண்ணும் போது நெஞ்சு நெகிழ்கிறது. நிலைமையை சீர்படுத்த அரசியலார் நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமும் அவசரமுமானதாகும். பாதிக்கப்பட்டவர்களின் நலனில் அக்கரை காட்டுவதில் எல்லாக் கட்சியினரும் ஈடுபடவேண்டும். அவர்களுக்கெல்லாம் நமது ஆழ்ந்த அனுதாபத்தை அவர்களுக்கு நிவாரணமளிக்கும் வகையில் தக்கது செய்வதின் மூலம் காட்டிக் கொள்வதுதான் சிறப்பானதும்—கடமையுணர்ச்சி நிறைந்ததுமாகுமென எண்ணுகிறேன். முன்னமே ஏழ்மையால் கொட்டுண்டு கிடக்கும் அந்தக் குடும்பங்கள் மீண்டும் இத்தகைய கொடிய விளைவுகளால் தாக்கப்படுவதினின்றும் காப்பாற்றப்பட திராவிட முன்னேற்றக் கழகம் தனது பங்கைச் செலுத்தி செயலாற்ற முனையவேண்டுமென விரும்புகிறேன்.

கூடிய விரைவில் பல இடங்களில் நமது நாடகங்களை நடத்துவதின் மூலமும் வேறு-முறைகளிலும் நன்கொடைகள் சேர்த்து பாதிக்கப்பட்ட பகுதியினருக்கு உதவியளிக்கலாமெனக் கருதுகிறேன்.

14–12–52-ல் தஞ்சையில் கழகப் பொதுக்குழு கூட்டத்தில் இந்த முயற்சிக்குத் தேவையான சிறந்த யோசனைகள் பற்றி ஆலோசிக்கப்படும்.

அன்பன்,

அண்ணாதுரை

புதிய பொதுக்குழு கூடுகிறது!

டிச 14: தஞ்சையில்

பெருமித ஏற்பாடுகள்

முக்கியமான முடிவுகள்

திராவிடநாடு

காஞ்சி] 14—12—52 [ஞாயிறு

புயலின் கொடுமை

★

இடிந்து விழுந்த சுவறினல் மடிந்தவர்கள் எட்டு பேர்.

மரம் விழுந்து மாண்டவர், திரைகடல் புகுந்ததால் செத்தவர், அறையும் காற்றுல் இறந்தவர் ஆக மொத்தம் 40 பேர்கள்.

கால்நடைகள் 5 ஆயிரம்.

தென்னை மரம் 2 லட்சம்

மா, பலா, புளி 100க்கு 30 சேதம்.

வாழையின் சேதம் வரையறுக்க இயலாது.

ஏழைகள் குடிசை 7 ஆயிரமாம்!

*

இவ்விதம் விவரித்து தஞ்சை மாவட்டம் பேராவூரணி திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் வெளியிட்டிருக்கும் துண்டு அறிக்கை ஒன்றினைக் கண்டோம். பேராவூரணி–சேதுபாவாசத்திரம்-பெருமகளூர்—திருச்சிற்றம்பலம் ரேஞ்சைப் பொறுத்தமட்டிலும், இந்தப் பட்டியல். 30-11-52 அடித்த புயலின் கொடுமை, நெஞ்சைக் குலுக்குகிறது. செய்தித் தாட்களைப் புரட்டினல், திகைப்புக்குமேல் திகைப்பு! தஞ்சை மாவட்டமும் திருச்சி மாவட்டமும் – சிதறுண்டுபோயினவாம். கடல் புகுந்ததாம், காரையிலும் நாகையிலும்! கட்டிடங்கள் தூளாம், ஆரூரிலும் அதைச் சுற்றியும்! நஞ்செய் பாழ்! புஞ்செய் அழிந்தது! ஆடு மாடுகள் அலைக்கு இரையாயின! ஆதித் திராவிடர் சேரிகள் அழிந்தன! அவர்கள் வெள்ளத்தில் மிதந்தார்கள்! பாலையோரங்களிலே பிணங்கள் ஒதுங்கின! இருநூறுக்குமேலிருக்கும். ரயில்கள் கவிழ்ந்தன! மரங்கள் வீழ்ந்தன! மகத்தான நஷ்டம்! ஐந்து கோடிக்குமேல் நாசம்! மக்களின் அவதி—இவ்விதம், துக்கச் செய்திகளைச் சுமந்து வருகின்றன, ஏடுகள்.

அவைகளைக் காணும்போது உள்ளம் துடித்தோம் — மனம் பதறினேம். புயலின் ஒருநாள் கூத்தில், நஞ்செய் நாடே அழிந்தது என்பதைக் கேட்டதில்லை, நாம். ஆகவே, அதனல் விளைந்த நஷ்டங்களையும் கஷ்டங்களையும் சேட்கும்போது, நம்மால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை — புயலின் கோரத்தை.

புயல் போய்விட்டது. ஆனல், அதனல் விளைந்த நாசத்தையும் சேதத்தையும் சமாளிக்கவேண்டிய பொறுப்பு, நம்மைச் சார்ந்திருக்கிறது. புயலின் கொடுமைக்கு ஆளானேருக்கு, நமது கண்ணீர் சொட்டும் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். இழந்ததை எண்ணிப் பெருமூச்சுவிடுவதில், இனிப் பயனில்லை. ஆகவே, இனி செய்ய வேண்டிய காரியங்களைக் கவனிக்க வேண்டுகிறோம்.

இயற்கையின் கோரத்தால் ஏற்பட்ட இந்தக் கேட்டை 'ஆண்டவன்' தலையில் போட்டுவிடாமல், 'கஷ்ட நிவாரணம் அளித்தல்வேண்டும்' என்று ஆச்சாரியார் சர்க்கார் அறிவித்திருப்பதாக அறிகிறோம். இந்தப் பெருந்தன்மைக்காக, அவருக்கு, நமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். கஷ்ட நிவாரணம் என்பதை கண் துடைப்பு வேலையாகக் கருதாமல், வாழ்விழந்தவர்களுக்கான நன்மைகளைச் செய்துதரவேண்டுமெனக் கோருகிறோம்.

நஞ்செய் அழிந்தது! அதனல் பஞ்சம் தலைவிரித்தாட நேரிடலாம் —இதனையும், ஆச்சாரியார் சர்க்கார் கவனத்தில் வைக்கவேண்டும். ஆங்காங்கு, கட்சி சார்பற்ற முறையில் நிவாரண வேலைகள் நடைபெறுவதற்கான வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டுகிறோம். இதற்கான எவ்வித ஒத்துழைப்பையும் தர, தி.மு.க. தயங்காது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். பேராவூரணி கழகத்தவர் வெளியிட்டிருப்பதைப்போல "கட்சிப் பாகுபாடின்றி அந்தந்தப் பிரிவுவாரியாக பஞ்ச நிவாரணக் கமிட்டி யமைத்து ஆங்காங்கு ஏற்பட்ட நஷ்டக் கணக்கினைப் புள்ளி விபரத்தோடு சேகரித்து, பஞ்ச நிவாரண வேலைகளைத் துரிதமாக்கும்படி எல்லாக் கட்சியினரையும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

சரிந்து வீழ்ந்த சுவரோரங்களிலும், முறிந்து வீழ்ந்த மரத்தோரங்களிலும் வாடி மெலிகின்ற ஏழைகளுக்கு, வேண்டிய உதவிகளை அளிக்குமாறு, ஆங்காங்கு வாழும் பணம் படைத்தோரையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இந்தத் திருப்பணி, பரிவு காட்டும்பான்மையுடன், கட்சி வேறுபாடின்றி நடைபெறவேண்டுமென்று எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

புள்ளி விபரம் சேகரிக்கவும், புயலால் தாக்குண்டோருக்குத் தம்மாலான உதவியைச் செய்யவும், இது சம்பந்தமான எல்லா ஒத்துழைப்புகளை நல்கவும் தி. மு. க. கிளைக் கழகங்கள் தயாராயிருக்கும் என்பதையும் அறிவித்துக்கொள்ளுகிறோம்.

வெள்ளத்தாலும் புயலாலும் தாக்குண்டு வாடிக் கிடக்கும் நஞ்செய் பூமி மக்களின் வரிகளை வஜா செய்யவும், சர்க்காரை வலியுறுத்த வேண்டியது அவசியம். அதற்கான குறிப்புகளையும், நிவாரண வேலையில் ஈடுபடுவோர், தயாரிக்கவேண்டுகிறோம்.

பொல்லாத புயலால் எல்லாம் இழந்தோர்க்கு உதவிசெய்ய முன்வருமாறு, மற்றப் பகுதிகளில் உள்ளோரையும் வேண்டிக் கொள்கிறோம். புயலின் ஒருநாள் கூத்து! அப்பப்பா—நாட்டையே காடாக்கிவிட்டிருக்கிறது! நினைத்தாலே நெஞ்சு நடுங்குகிறது!!

★

திருத்தம்

"வாழ்த்துகிறோம் — வரவேற்கிறோம்" என்ற தலைப்பில் வந்த கட்டுரையில் மதுரை மாவட்டச் செயலாளர், நிர்வாகிகள் பெயர் தவறுதலாக விடுபட்டுப் போய்விட்டது. சேர்த்துக் கொள்ள வேண்டுகிறோம்:- மாவட்ட செயலாளர் எஸ். வி. தொந்தி, துணைச்செயலாளர்:-எம். அய்யாச்சாமி, பொருளாளர்:-எஸ். கிருஷ்ணசாமி, பொதுக்குழு உறுப்பினர்கள்:-கு. ப. ம. தர்மன், கே. எஸ். ராசமான், தா. ஆவுடையப்பன், கே.வி. விக்கிரமாதித்தராசன், எம். எஸ். பால்ராசன், எஸ். வி. தொந்தி, கே. தங்கவேல், கே. நடராசன், வெ. தியாகராசன், எம்.எஸ். பழனியப்பன்.

திருச்சி மாவட்டப் பொதுக்குழு உறுப்பினர்கள் பெயரில் கே. எ. மதியகழன் என்றிருப்பது தவறு. கே. எ. முருகேசன் என்று திருத்திக்கொள்க.

நெல்லை மாவட்டப் பொதுக்குழு உறுப்பினர்கள் பெயரில் வீ. புகழேந்தி என்றிருப்பது ட். புகழேந்தி என்றிருக்கவேண்டும்.

ஆசிரியர்.

'செலக்ஷன்' முறை வேண்டாம்!

மாணவ உலகின் எக்காளம்

மதியழகன் நன்றி

டிசம்பர் 5-ந் தேதி 'செலக்ஷன்' எதிர்ப்பு தினமாக பள்ளிக்குச் செல்லாமலும், ஊர்வலங்கள் நடத்தியும், கண்டனப் பொதுக்கூட்டங்களில் தீர்மானம் நிறைவேற்றியும், தமிழ்நாடு முழுதுமுள்ள உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் வெற்றிகரமாக தங்களது எதிர்ப்பை தெரிவித்துள்ள விதத்தையும் அளவையும் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் பாராட்டுகிறது.

மாணவர்களால் வெறுக்கப்படுகிற, பெற்றோர்களால் விரும்பப்படாத, எல்லாக் கட்சியினரின் கண்டனத்தைப் பெற்ற 'செலக்ஷன் முறை' கூடாது என்பதை மாணவர் உலகம் எவ்வளவு வன்மையாக எதிர்க்கிறது என்பதை டிசம்பர் 5ந் தேதிய நிகழ்ச்சிகள் சர்க்காருக்கு உணர்த்தியிருக்கும் என்று நம்புகிறோம்.

இந்த முயற்சியில் மாணவர்களுடன் ஒத்துழைத்த எல்லா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கும்; எல்லா கட்சித் தலைவர்களுக்கும் மற்ற மாணவர் அமைப்புகளுக்கும், பத்திரிகைகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சர்க்காரும் காலம் கடத்தாமல் உடனே செலக்ஷன் முறையை ரத்து செய்யவேண்டும் என்று வற்புறுத்துகின்றேன். இந்தக் கிளர்ச்சியின் மூலம் மாணவர் சமுதாயம் எவ்வளவோ இருட்டடிப்புக்கு நடுவேயுங்கூட, தனது கட்டுப்பாடான ஒற்றுமையும, உரிமைக்காக போராடும் போர்ப் பண்பையும் பேரார்வத்துடன் நிரூபித்து இருக்கிறது.

கடைசியாக உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் ஒரு வார்த்தை. 5-ந் தேதி கிளர்ச்சியில் மாணவர்கள் பங்கு கொண்டது, அவர்களின் பொதுப் பிரச்சினையில் அவர்களுக்குள்ள அக்கரையும் ஆர்வமும்தான் காரணம். அது தனிப்பட்ட மாணவரின் தனி நடவடிக்கையல்ல. ஆசிரியர்—மாணவர் நல்லுறவைத் தாண்டிப்பதற்காக அவர்கள் ஆற்றிய செயலல்ல. மாணவர்களுக்கு தங்கள் பொதுப் பிரச்சினையிலுள்ள புனிதமான அக்கரையே அவர்கள் செயலுக்குக் காரணம். இதை எல்லா தலைமையாசிரியர்களும் உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே, எந்த மாணவருக்கும் டிசம்பர் 5ந் தேதிக் கிளர்ச்சிக்காக, தண்டனை கொடுக்கவோ, பள்ளியிலிருந்து விலக்கவோ, பழி வாங்கவோ சம்மதிக்கமாட்டார்கள் என்று மனதார நம்புகிறோம்.

மீண்டும் எல்லோருக்கும் நன்றி தெரிவித்தும், சர்க்காரும் விரைவாக இந்த முறையை ரத்து செய்யவேண்டுமென்று திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் கேட்டுக்கொள்கிறது.

கே. எ. மதியழகன்,
தி. மா. மு. க. பொதுச்செயலாளர்.

*

கடந்த 5-ந்தேதியன்று தமிழகத்தின் பல்வேறிடங்களிலும், சென்னை மாநகரத்திலும் மாணவர்களின் அறப்போர் வெற்றிகரமாக நடைபெற்றிருப்பதாக, செய்திகள் வந்து குவிந்துள்ளன. எல்லா ஊர்களிலும் பொதுக் கூட்டங்களும், ஊர்வலங்களும் சிறப்பாக நடைபெற்றிருக்கின்றன. சென்னையில் ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டனராம். அன்று மாலை நுங்கம்பாக்கம் ஏரிக்கரை மைதானத்தில் 'சண்டே அப்சர்வர்' ஆசிரியர் பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் எ. கே. சாமி எம். சி, கன்னியப்பன் எம். சி., ப. ஜீவானந்தம், கே. எ. மதியழகன் பி. எ, ஆகியோர் செலக்ஷன் முறையைக் கண்டித்துப் பேசினர்.

[செய்திகள் தாமதமாகக் கிடைத்ததால் விபரமாக வெளியிட இயலவில்லை—ஆ-ர்]

சாமி பழனியப்பன்-கமலா திருமணம்

"வாரச்செய்தி" துணையாசிரியர் கவிஞர் சாமி பழனியப்பனுக்கும், தோழியர் கமலாவுக்கும் 27-11-52 வியாழக்கிழமை பொன்னமராவதி-புதுப்பட்டியில், காரைக்குடி சப்-ரிஜிஸ்ட்ரார் உயர் திரு. சி. சுப்பையா B A., அவர்கள் தலைமையில் தமிழ்த் திருமணம் சிறப்புற நடைபெற்றது. அன்று பிற்பகல் 4-மணிக்கு உயர் திரு. சி. சுப்பையா B A., அவர்கள் தலைமையில் வாழ்த்துக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் மணமக்கட்கு ஏராளமான வாழ்த்திதழ்கள் வாசிக்களிக்கப் பெற்றன. ஏராளமான பரிசுகளும் வழங்கப்பெற்றன. கலைமகள் அச்சகம், வாரச்செய்தி அலுவலகத் தோழர்கள் மணமக்கட்குப் பண முடிப்பு ஒன்று வழங்கினர்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், இலங்கை, மலேயா போன்ற அயல்நாடுகளிலிருந்தும் ஏராளமான வாழ்த்துக் கடிதங்களும், தந்திகளும் வந்திருந்தன. மணமக்களைப் பாராட்டி, அழகப்பா கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் ச. தேசிகன், பொருளாதார விரிவுரையாளர் டி. செல்லப்பா M. A., எஸ். குழந்தைநாதன் B. A., அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் என். சுப்பு ரெட்டியார் M, A, B. Sc., L. T., எஸ். எம். எஸ். உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்கள் கவிஞர் முடியரசன், புலவர் இராம. பெரியகருப்பன், கானடுகாத்தான், திருமதி மஞ்சுளாபாய் வைசு, காரைக்குடி திரு. டி. ஆர். எஸ்டி. கண்ணப்பன் ஆகியோரும் வேறு பலரும் சொற்பொழிவாற்றினர். இந்தப் பகுதியிலேயே முதன் முதலாக இம்முறையில் நடைபெற்ற இத் திருமணத்திற்குப் பெரும் அளவில் ஆண்களும், பெண்களும் திரளாக வந்திருந்தனர். இறுதியில் மணமகன் அனைவருக்கும் நன்றி கூறினர்.

✲

செலக்ஷன்முறை கண்டனம்

தாத்தையங்கார்பேட்டை
மணப்பாறை
அரியலூர்
அரக்கோணம்
ஈரோடு
ஒரத்தநாடு
தேவகோட்டை
கல்லிடைக்குறிச்சி
மற்றும் பல இடங்களில்.

நடக்க இருப்பவை

ஆம்பூர்: 21—12—52 அன்று மாலை நடைபெறும் பொதுக் கூட்டத்தில், மு. கருணாநிதி, சிவாஜி கணேசன், கண்ணதாசன் ஆகியோர் கலந்துகொள்வர். (7—12—52ல் நடக்க இருந்த மேற்படி கூட்டம் மழையின் காரணமாக இத்தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது)

குதிரை கீழே தள்ளி குழியும் பறிக்கிறதே!

★

"அழுத பிள்ளைக்கு அழுகல் வாழைப்பழம்!

அடாடா! ஏழைக் கைத்தறியாளரின்மீது இந்திய சர்க்காரின் தொழில் இலாகாவுக்குப் பிறந்த கருணையை என்னவென்று சொல்வது?

தரித்திரம்பிடித்த பிள்ளை எதற்காக அழுதது? அழுகல் வாழைப் பழத்தைக், கொடுத்துத்தான் அதைத் தண்டிக்கவேண்டும்!

100-க்கு 40-வீதம், கரைபோட்ட வேஷ்டியைக் கைத்தறிக்கே ஒதுக்கியிருப்பதாக இந்திய சர்க்கார் வெளியிட்டிருப்பது, 'அழுத பிள்ளைக்கு அழுகல் வாழைப்பழம்' தருவதுதான்.

ஆசைகாட்டி மோசம் செய்கிறார்கள்!!

கைத்தறித் தொழிலுக்கு உதவுவதாக இந்திய சர்க்கார் பிறப்பித்த உத்தரவு ஆலைகளுக்கு உதவும் நோக்கம் கொண்டதே.

சென்ற ஆண்டில் ஆலைகள் கரைபோட்ட வேஷ்டிகளை மிதமிஞ்சி உற்பத்தி செய்தன. அதன்பயனாக, விற்பனையாகாமல் சரக்கு தங்கிப் போயிற்று. எனவே, ஆலைகளே இவ்வருஷத்தில் கரைபோட்ட வேஷ்டி உற்பத்தியைக் குறைக்கத் தொடங்கியிருக்கின்றன.

1951-ம் வருஷத்தில் மாதம் ஒன்றுக்கு ஐப்பதினாயிரம் கட்டுகள் வீதம் உற்பத்தி செய்துவந்தவை, இந்த வருஷத்தில் நாற்பதினாயிரம் கட்டுகளாகக் குறைத்துக் கொண்டிருக்கின்றன.

நன்மையில்லை; தீமை உண்டு!!!

பெரிய தொழில்களை நடத்தும் முதலாளிகள் சில சமயம் தங்களுக்குள் கட்டுப்பாடு செய்துகொள்வார்கள். தேவைக்கு அதிகமாகச் சரக்கு உற்பத்தியாகி அதனால் விலை குறைக்க நேருவதை அவர்கள் விரும்புவதில்லை. ஆகையால் உற்பத்தியை அவர்களே கட்டுப்படுத்திக் கொள்வார்கள். இதற்குச் சில சந்தர்ப்பங்களில் சர்க்காரின் உதவியையும் நாடிப் பெறுவார்கள்.

ஆகவே, ஆலைகளுக்குத்தான் இந்த உத்தரவினால் நன்மை. தங்கிப்போன சரக்கை விலை குறைக்காமல் தள்ளிவிடுவதற்கு இது உதவி செய்யும்.

"ஓர் அருமையான சந்தர்ப்பத்தைக் கொடுத்தோம்; அதைக் கைத்தறிகாரர்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை!" என்று சில மாதத்திற்குப் பிறகு சொல்லிக் காட்டலாம் அல்லவா?

பாதிக்கிணறு தாண்டும் படுமோச உத்தரவு!

கரைபோட்ட வேஷ்டியை முழுதும் ஒதுக்கிவைத்தால், கைத்தறிக்காரர்கள் ஒரு துறையிலாவது ஆலைகளின் போட்டிப் பயமின்றி ஓரளவு கணிசமான துணி உற்பத்தி செய்யலாம்; அவற்றை இலகுவாக விற்றுப் பிழைக்கலாம். அரைகுறையாக ஒதுக்கும்போது ஆலை முதலாளிகள் போட்டியிட்டுக் கைத்தறித் தொழிலை அழிக்கத்தான் பார்ப்பார்கள். வேண்டுமென்று விலையைக் குறைத்து விற்பார்கள். மலிவான நூலையெல்லாம் தாங்கள் வைத்துக் கொண்டு ஒப்புக்கு இரட்டிப்பு விலையான நூலைக் கைத்தறிகாரர்களின் தலையிலே கட்டுவார்கள். பிறகு, "பார்த்தீர்களா? ஆலைத்துணி எவ்வளவு மலிவாயிருக்கிறது? கைத்தறித்துணி எவ்வளவு கிராக்கியாயிருக்கிறது?" என்பார்கள்.

அவர்கள் சிலர் தான்; இவர்கள் பலராயிற்றே!

பெரும் பணக்காரர்களான ஆலை முதலாளிகள் ஒரு சிலர்தான். அவர்கள் பின்னால் வரும் லாபத்தைக் கருதி, கோடிக்கணக்கில் நஷ்டம் அடையக்கூடத் தயாராகயிருப்பார்கள். நெய்த துணியை ஒரு வாரத்துக்குமேல் வைத்திருந்தால், அவர்கள் தாக்குப்பிடிக்க முடியாது. அடுத்த வாரம் பட்டினிகிடக்க நேரிடும்.

ஆலையரசர்களின் பேராசையும் சூழ்ச்சியும்.

கைத்தறித்துணி ஆலைத்துணியைவிட இப்போது சிறிது விலை கூடுதலாக இருக்கிறது. இதற்குக் காரணம் ஆலைமுதலாளிகளின் சூழ்ச்சியும், பேராசையும், இந்திய சர்க்காரின் முன்யோசனையற்ற நிர்வாகமும்தான்.

அதிக விலையுள்ள அயல் நாட்டுப் பருத்தியில் செய்த நூலை ஒன்றுக்கு இரண்டு விலை வைத்துக் கைத்தறிக்காரர்களின் தலையில் கட்டுகிறார்கள். இதைக் கவனித்துச் செய்யவேண்டியதைச் செய்யாமல் "கைத்தறித் துணி விலை அதிகமாயிருக்கிறது" என்று அறியாதவர்களோடு சேர்ந்து அரசாங்கத் தலைவர்களும் பழி சொல்லுவது,

குதிரை கீழே தள்ளியதோடு—குழியும் பறிப்பதாகும்!!"

*

ஓரவஞ்சனை செய்கிறது!
நம்மைக் கவனிக்கவில்லை.

நன்மை செய்வதாகப் பாசாங்கு செய்கிறது—அதிலும்சூதாட்டம்.

ஆலையரசர்களை அணைக்கிறது.

ஆலையரசர்கள் பேராசையும் சூழ்ச்சியும் உடையவர்கள்.

இந்திய சர்க்கார் அவர்களுக்கனுசரணையாக இருக்கிறது.

வாழ்வோர் சிலர்; வாடுவோர் பலர்.

சூதுமதி! சூழ்ச்சி! உள் எண்ணம்!

கீழே தள்ளிக் குழி பறிக்கிறார்கள்!

அழுத பிள்ளைக்கு அழுகல் பழம்!

ஆசைகாட்டி மோசம்!!

தலைப்பிலே, நாம் தந்திருப்பதன், சுருக்கம் இது. இத்தகைய குற்றச்சாட்டுகளையே, டில்லி சர்க்கார் குறித்து நாம் அடிக்கடி வலியுறுத்தி வருகிறோம். கோணல் மதியின் காரணமாக அல்ல; குனிந்து மெலிந்து போய்க்கொண்டிருக்கும் தென்னாட்டின்மீது வடவருக்கு ஒருபோதும் அனுதாபம் ஏற்பட முடியாது என்பதை விளக்குவதற்காக.

வடநாடு, ஓர் பணத்தோட்டம்! அதுஓர் ஆலையரசு!! — என்று நாம் அடிக்கடி கூறிவருவது, வடவர் பூமியின் செழிப்பைமிகைப்படுத்திக் கூறும் நோக்குடனல்ல. அவ்விதம் துரும்பைத் தூணாக்கி விவரித்தால் தான், திராவிடநாட்டுப் பிரச்சினைக்கு ஆதரவு திரட்டமுடியும் என்ற அற்ப ஆசையுடனுமல்ல. உண்மையில் வடநாட்டைப்போல நமது தாயகமும் தளிர்மலைச் சோலையாகவிருந்தால், பிரிந்து வாழவேண்டுமெனும் 'பேதை மதி' நமக்கேன் ஏற்படப்போகிறது? கனியொருகையிலும் காஞ்சிரங்காய் மற்றோர் கரத்திலும் ஏந்தி, கனியைத்தனது குழந்தைக்கும் காஞ்சிரங்காயை சக்களத்தி குழந்தைக்கும் பகிர்ந்து கொடுக்கும் பாதக உள்ளம், இந்திய சர்க்காரிடம் இருக்கிறது, என்பதைப் புள்ளி விபரங்களோடு விளக்கி வருகிறோம். இருதயநாதம் கேட்காத அளவுக்கு, தேசிய கீதத்தால் 'செவிடாகி'ப் போனோரை புள்ளிவிபரங்களாவது தட்டி எழுப்பாதா, எனும் ஆசையே, அதற்குக் காரணம். பண உதவி கேட்டால் — 'இல்லை!' 'உணவு' கேட்டால்—'இல்லை!' இவ்விதம் எதற்கெடுத்தாலும், சென்னை, 'கேட்பதும்' டில்லி 'இல்லை'யென்று கூறுவதுமான நிகழ்ச்சிகளே தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதே நேரத்தில், நமக்கு 'இல்லை'யென்று கூறுகிற டில்லியின் வாய், வடவருக்கான சலுகைகளை வழங்கத் தவறுவதில்லை. ஒரு கண்ணுக்கு வெண்ணெயும் மற்றோர் கண்ணுக்குச் சுண்ணாம்பும் தடவும், டில்லியின் போக்கை, எடுத்துக் காட்டும் விளக்கக் குறிப்புத்தான், மேலே தரப்பட்டிருப்பது.

இந்தக் குறிப்புகளை, நாம் வெளியிடுவதற்காகத்தான், பற்பல பழிச்சொற்களை ஏற்கவேண்டியிருக்கிறது. பித்தன் என்போரும்; சித்தப்பிரமை பிடித்த கூட்டம் எனச் செப்புவோரும், 'தத்தாரிகளையா!' என்று எள்ளி நகையாடுவோருமாக இருக்கிறார்கள் தேசிய நண்பர்கள்.

"வடநாட்டுடன் இணைந்திருப்பதால் என்ன லாபம்? பட்டியல் கொடு! எங்கள் கோரிக்கையைவிட்டு விடுகிறோம். டில்லியுடன் சேர்ந்திருப்பதால் இன்னின்ன நஷ்டம் என்று நாங்கள் பட்டியல் தருகிறோம். ஏற்றுக்கொள்ள உனக்கு நேர்மையுண்டா?"—என்று ஆயிரமாயிரம் பொதுக் கூட்டங்களிலே தேசிய நண்பர்களைப் பார்த்துச் சவால் விடுத்திருக்கிறோம். டில்லி, நம்மை வஞ்சிக்கும் விபரங்களையும் பட்டியல் தரத்தவறுவதில்லை, நாம்—அவ்வப்போது.

ஆனாலும், நம்மை எள்ளி நகையாடுவதிலும் பழியை வீசுவதிலும், காலத்தைக் கழிக்கும் காங்கிரஸ் நண்பர்கள், விபரமோ விளக்கமோ தரமுன்வருவதில்லை. சந்துமுனை சிந்துநடை, 'பார்! என்ன செய்கிறோம்!' என்றோர் பாய்ச்சல், 'நாஸ்திகர்கள்' என்றோர் பழி — இவைகளை வீசிவிட்டு, 'போலோ பாரத் மாதாகி' என்று கூவச்சொல்லிவிட்டுக் கலைந்துபோய்விடுகிறார்கள்.

இவ்விதம் அவர்கள் கர்ஜிப்பதும் 'ஜே!' போடுவதும், அவர்களுக்கு காங்கிரஸ் கட்சியின் மீதிருக்கும் ஆர்வத்தையும் அபிமானத்தையும்—அல்லது, நம்மீது இருக்கும் தனிப்பட்ட குரோதத்தையும் துவேஷத்தையும்—எடுத்துக் காட்டப் பயன்படலாம். நாட்டுக்கு விடிமோட்சம், ஏற்படச் செய்யாது.

கட்சியைவிட நாடு பெரியது.
கட்சிக்காக, நாடு அல்ல!
நாட்டுக்காகத்தான் கட்சிகள்!!

நமது தேசிய நண்பர்கள் இதயத்தில் கட்சிதான் முதலிடம் பெறுகிறது. பழம்பெருமை, தலைவர்களின் அருமை, இவ்விதம் முழக்கிவிட்டு வருகிறார்களேயொழிய நாட்டைக் கண்முன்னிறுத்தி, எந்தப் பிரச்னையையும் ஆராய்வதில்லை. திரைச்சீலையைப்பற்றிக்கவலைப்படாது, வர்ணம் கூட்டும் சட்டிகளைப்பற்றி சிரத்தை எடுத்துக்கொள்ளாது, 'பிரஷ்' மட்டும் வைத்துக்கொண்டு சித்திரம் தீட்ட முயற்சிக்கிறார்கள், தேசிய நண்பர்கள் சித்திரம் எப்படி உருவாகமுடியும்? தூரிகையைவைத்துக் கொண்டு "அழகான பிரஷ் இது! ஆயிரமாயிரம் ஓவியங்களைத் தீட்டியது. ஆகவே என்னை புகழ்வீர்" என்று, முழக்கமிடும், ஓவியனின் நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். எனவேதான் திரைச் சீலையைக் காட்டி, வர்ணங்களை விளக்கி, 'வா! ஓவியம் தீட்டலாம்' என்று அழைக்கும் நம்மைப் பார்த்து, கோபம் கொள்கிறார்கள். ஓவியத்தைவிட, பிரஷ்மீது ஆசை கொள்ளாரெவரும்! ஆனால், நமதுதேசியத் தோழர்கள் விஷயம்மட்டும், மாறுபட்டதாகவே இருக்கிறது. அழகான சீலை மாற்றான்வசம். கலர் கரைக்கும் பாத்திரங்கள்—மாற்றான் கையில். சித்திரம்தீட்டத்தான் இயலுமா? — நாட்டையும் அது வழங்கும்பொருளையும் மாற்றான்வசம் ஒப்படைத்துவிட்டு, 'கட்சி' என்கிற பிரஷைமட்டும் வைத்துக்கொண்டு, எவ்விதம் தேசத்தை முன்னேறச் செய்யமுடியும்?—இந்த உண்மையை நமது தேசிய நண்பர்கள் உணர மறுக்கிறார்கள் — எப்போதாவது உள்ளத்தில் உறைத்தாலும் 'காங்கிரஸ் கட்சி' எனும் போர்வையைப் போட்டு மூடிக்கொண்டு விடுகிறார்கள். இவ்விதம், தன்னாட்டவர்படும் வேதனைகளையும் தொல்லைகளையும் அடிக்கடி மூடிக்கொண்டாலும், சில வேளைகளில், அவர்களையறியாமலே வெள்ளம் உடைப்பெடுத்துவிடுகிறது. அதுபோது, நாம்எத்தகைய வார்த்தைகளை வடநாட்டு ஆதிக்கத்தின்மீது வீசுகிறோமோ, அதைவிடக் கொடுமையான அளவுக்கு வீசுகிறார்கள்.

தலைப்பிலே நாம் தந்திருக்கும் வார்த்தைகளைக் காணுவோர், நாம் தீட்டியவை யென்றே கருதுவர். அவ்வளவு வேகமும் தாக்குதலும் கலந்திருக்கின்றன ஆனால், அவை அனைத்தும் நாம் தீட்டியதல்ல. தேசிய முரசமாம் "கல்கி" தனது டிச. 7ந்தேதிய இதழில், இவ்வண்ணம் எழுதியிருக்கிறது. அந்தக் கட்டுரையை அப்படியே நாம் பிரசுரித்தால், "கல்கியா?" என்று கேட்கத் தூண்டும். இடமின்மையால், முழுவதையும் பிரசுரிக்க முடியவில்லை.

டில்லி—சூது செய்கிறது
பணக்காரர்களை ஆதரிக்கிறது
வடநாடு, பண அரசு
நமது வேதனையை மறுக்கிறது.

'கல்கி' இதழார், சித்தரிக்கிறார் இவ்விதம்! கண்டீர்களோ தேசிய நண்பர்களே, என்று கேட்க விரும்புகிறோம். 'கல்கி' இதழ் இவ்விதம் சித்தரிக்கிறது! சாதாரணமாகவல்ல —விளக்கங்களோடு. 'முதலாளித்துவம்' என்றால் என்ன? அதனுடைய நோக்கமெல்லாம் எது? என்பதையும், 'கல்கி'யார் விளக்கியிருக்கிறார்.

"தேவைக்கு அதிகமாகச் சரக்குக் குவிந்து விலை குறைக்க நேருவதை அவர்கள் விரும்பமாட்டார்கள். ஆகவே சரக்கு உற்பத்தியை அவர்களே குறைத்துக் கொள்வார்கள்"

அவர்கள் யார்? — முதலாளிகள்! அத்தகைய முதலாளிகளுக்குச் சர்க்காரும் அனுசரணையாக இருக்கிறதாம். எந்தச் சர்க்கார்?—இந்திய சர்க்கார்!!

அதிகக்கோதுமை உற்பத்தியாகிவிட்டால், அவைகளை 'அமேஸான்' நதியில் கொட்டிவிடுவார்கள் என்று அமெரிக்க முதலாளிகளைப் பற்றிக் கேள்வியுற்றிருக்கிறோம். பசியால் தவிப்போருக்கு அந்த 'அதிகக் கோதுமை'யை உதவமாட்டார்கள்—தமது வியாபாரம் சரியாக நடைபெறாமல், தமது பொருள்களுக்கு 'கிராக்கி' ஏற்படாமல் போய்விடுமோ எனும் பயத்தால். இந்தப் பயம், முதலாளித்துவவாதிகளுக்

தேசீய நண்பர்களே! என்ன செய்யப்போகிறீர்கள்?

குத்தான் ஏற்படும். அதே நிலையில், வடநாட்டு பணதிபத்யவாதிகள் இருப்பதாக, கல்கி கூறுகிறது.

மக்களின் தேவைக்கு ஏற்ற உற்பத்தி—இது நல்லரசின் தத்துவம்.

தனது லாபத்துக்கு ஏற்ற உற்பத்தி–இது பண அரசின் கொள்கை.

பணஅரசின் கொள்கைக்கு டில்லி சர்க்கார், தலைவணங்குவதாக 'கல்கி' யார் கூறுகிறார். டில்லி, ஓர் பண பீடம்! என்கிறார்.

நாம், நமது பிரிவினைக் கோரிக்கைக்கு எடுத்துக் காட்டும் காரணங்களில் முக்கியமானதை தேசீய இதழார், வெளியிடுகிறார்.

இந்த இடத்தை உற்று நோக்கும்படி தேசீய நண்பர்களுக்கும் அறிவுறுத்துகிறோம்.

தன்னாட்டில் வாழும் டாடா, பிர்லா, டால்மியாக்களுக்காக, 'டில்லி' பீடம் இருக்கிறது. அவர்களது இலாபத்தைக் குறைத்து விடக் கூடாது என்பதில் விசேஷ அக்கரை கொள்கிறது.

இத்தகைய மனோபாவம் சொண்டோருடன், ஏன் நாம் சேர்ந்து வாழவேண்டும்?—சிந்திக்க வேண்டுகிறோம், சீறுவோரை.

டில்லி, டால்மியாக்களின் கூடம்!

டில்லி, பண அரசு!

டில்லி, 'ஓர் அமெரிக்கா'!

டில்லி–மக்கள் வேதனையைவிட மாளிகையதிபர்களுக்காக இருப்பது.

இவ்விதம் "கல்கி" யார்கூறுகிறார்! இதுவரை இந்த விஷயங்களை ஏற்றுக் கொள்ளாதவர் கூறுகிறார்!! நைத்தறிக்காரர்களின் கண்ணீரைத் துடைக்கவழி செய்யாததைக் கண்டு, இவ்விதம் எழுதுகிறார். 'கல்கியார்' ஆச்சாரியாரின் அந்தரங்க சீடர்களில் ஒருவர். அவரது 'ஏடு', இவ்விதம் தீட்டுகிறது என்றால், 'குருநாதரின்' எண்ணத்தைக் கொட்டுகிறது, எழுத்துக்கள் மூலம் என்பதுதான் அர்த்தம்.

குதிரை கீழே தள்ளியதோடு, குழியும் பறிக்கிறது!

தறியாளர் கண்ணீரைத் துடைக்காதது மட்டுமல்ல, அவர்களுக்கு தீங்கும் செய்கிறது, டில்லி!

இந்தக் கேடு கெட்ட நிலைக்கு என்ன பதில் கூறுகிறார், ஆச்சாரியார்? "இந்தியா முழுமையும் எமது நாடு—எனிநில் வேற்றுமைக்கேடு" என்று பாடினீர்களே, தேசிய நண்பர்களே! இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்? உங்கள் கட்சி தான், மாகாணத்தை ஆள்வதும் மத்தியத்தில் அரசோச்சுவதும். ஆனால், உங்கள் கோரிக்கையை ஏற்கவில்லை, டில்லி! கீழே தள்ளியதோடு, குழியும் பறிக்கிறது! என்ன செய்யப் போகிறார், ஆச்சாரியார்? என்ன செய்யப் போகிறீர்கள் நீங்கள்?—மனித வாழ்வை மதிக்கவில்லை, டில்லி! கைத்தறியாளர் அவதியைக் குறைக்க முன்வரவில்லை இந்திய சர்க்கார்! ஆலை முதலாளிகளுக்கு ஆதரவு தருகிறார்கள்—'கல்கி'யாரே ஒத்துக்கொள்கிறார். இத்தகைய முதலாளித்துவ மனோபாவம், டில்லி தலைவர்களுக்கேற்பட்டு விட்டதாம். இதனைக் கண்டிக்கிறார் கல்கி! அவர், ஆச்சாரியாரின் 'குரல்'!! நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? டில்லி பெரிதா! நமது சகோதரர்கள் வாழ்வு பெரிதா? கட்சி பெரிதா! நம்மவர் வாழ்வு பெரிதா? முதலாளித்துவ முன்னேடும் பிள்ளையாம் வடநாட்டுக் காங்கிரஸ் பீடம் முக்கியமா? நம் நாட்டு ஏழைமக்கள் கண்ணீர் துடைப்பது, முக்கியமா?—இதில், எது வென்பதைச்சிந்திக்க வேண்டுகிறோம், காங்கிரசின் உண்மைத் தொண்டர்களை.

★

"ஆசை நிறைவேறவில்லை; ஆகவே, சாகிறேன்!"

[கஜா]

"கதர் என்கிற போர்வையில் இன்று நடத்தப்பட்டுவரும் சதியாலோசனைகள் எனதுள்ளத்தை நிம்மதியிழக்கச் செய்துவிட்டன"

"இந்தக் காங்கிரசார் நடாத்தும் பரிகாசக்கூத்து, இவ்வுலகில் நான் வாழ்வதால் பயன்கிடையாது என்ற முடிவுக்கு என்னை வரச்செய்துவிட்டது. இந்தக் கூத்தை, ஜனநாயகத்தின் பேரால் மிகமிக வன்மையாகக் கண்டிக்கிறேன்"

"காங்கிரஸ் மகாநாட்டுக்குப் பிரதிநிதியாக, பல நாள் பாடுபட்ட ஏழைத் தொண்டனாகிய நான் செல்லமுடியவில்லை. செல்வத்தின் பெயரால் சர்வாதிகாரம் செய்து கொண்டும் கொடுமை செய்து கொண்டும் வாழ்பவர்கள் விரைவில் அழிந்தொழியும் வண்ணம், ஆண்டவன், புரட்சியைத் தோற்றுவிப்பாராக"

"காங்கிரஸ் 'டெலிகேட்'டாகச் செல்ல விரும்பிய நான் ஜபல்பூர் தொகுதியில் நின்றேன். காங்கிரசை ஆட்டிப் படைப்போர்களுடைய ஆதிபத்யம் காரணமாக என் ஆசை நிறைவேறவில்லை. எனது மாகாண காங்கிரஸ் தலைவர் லட்சுமி சங்கர்பட், சபாநாயகர் குஞ்சிலால்பே ஆகியோரது அரசியல் பித்தலாட்டங்களால், கிழக்கு ஜபல்பூர் தொகுதியிலிருந்து நான் வாபஸ் வாங்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டேன்"

"காங்கிரஸ் கட்சி தேர்தல் ஒழுங்காக நடத்தப்பட்டிருக்கும் பட்சத்தில், நான் வெற்றியடைந்திருப்பது நிச்சயம். ஆனால், நீதிதவறிய நடவடிக்கைகளால், என் ஆசை நிறைவேறவில்லை. ஆகவே, சாகிறேன்"

"அபேட்சாபத்திரத்தை நான் வாபஸ் வாங்கிக்கொண்டதாகப் பொய்ப் பிரச்சாரம் கிளப்பி, என் மீது அவதூறு உண்டாக்க, முயன்ற, பணக்காரத் தலைவர்களைக் காணச் சிந்தை நோகிறேன். நான் பாடுபட்டு வளர்த்த கட்சிக்குள் இவ்வாறான கறைப்படுத்தப்பட்ட வழக்கங்கள் மலிந்து வருவதைக் காண வெறுப்படைகிறேன். அதனால் உலகில் தொடர்ந்து வாழ்வதில் ஒரு பிரயோஜனமுமில்லையென்ற முடிவுக்கு வருகிறேன்"

"நான் தீட்டும் இந்தக் கடிதம், காங்கிரஸ் தலைவர் பண்டிதஜவஹர்லால் நேருவுக்கு அனுப்பப்பட வேண்டும். ஜனநாயகக் கொள்கைகளை மிதித்து, நாசம் செய்துவரும் காங்கிரஸ் எத்தகையது என்பதை அவர் உணர்வாராக. நான் தற்கொலை செய்துகொள்கிறேன். எனது கட்சி 'கொலை' செய்யப்படுவதைக் காணச் சகிக்காமல் அளவில்லா அருவருப்புடன் இவ்வுலகை விட்டுச் செல்கிறேன்! விடை பெறுகிறேன்!!"

*

இவ்விதம் கடிதம் ஒன்றைத் தீட்டி வைத்துவிட்டு, மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த காங்கிரஸ் தொண்டரொருவர், தற்கொலை செய்துகொண்டிருக்கிறார். அவரது பெயர் பண்டித ஜகன்னாத சாஸ்திரி. கடந்த இருபதாண்டுகளாகக் காங்கிரஸ் கட்சியில், அதன் வாழ்விலும் தாழ்விலும் தொண்டராகச் சேவைபுரிந்தவர். ஆனால், ஏழை! எனவே, காங்கிரஸ் 'டெலிகேட்'டாகச் செல்ல முடியவில்லை. அதனால், மனம்நொந்து, தன்னை மடித்துக்கொண்டிருக்கிறார்.

விளம்பரம் விரும்பாத, டாம்பீகமற்ற காங்கிரஸ் ஊழியர். கட்சித் தொண்டர்களின் நன்மதிப்பைப் பெற்றவர். எனினும் எம். எல். ஏ. யாகவோ, எம். பி. யாகவோ வர விரும்பவில்லை. விண்ணப் பிக்கவுமில்லை. கட்சி மாநாட்டுக்கு பிரதிநிதியாகச் செல்ல ஆசைப் பட்டார். ஏழைப் பொதுத் தொண்டனின் ஆசைக்கு முதல் மந்திரி பண்டித சுக்லாவின் ஆசியோ அல்லது சேத் கோவிந்ததாஸின் அருளோ கிட்டவில்லை. எவ்விதம் கிட்டும். அவரோ ஒரு சாதாரண கோயில் பூஜாரி! பூஜாரியின் வேலை, விக்ரகங்களைக் கழுவி, தூபதீபநைவேத்யம் காட்டி, சகஸ்ரநாம அர்ச்சனை நடத்தி, சாமிகளின் புகழ்களைச் சொல்லிக்கொண்டிருப்பதுதானே? அதை விட்டுவிட்டு, 'விக்ரகங்களின்' இடத்துக்குப்போக விரும்பலாமா! ஆகவே 'அரசியல் தேவதைகள்' அவரை, அலட்சியப் படுத்தின. "உனக்கேனடா இந்த ஆசை? கொடி தூக்கு! பஜனைசெய்! ஜே, போடு! கூட்டம் போடு! மாலை கட்டு!—இதை விட்டுவிட்டு வீணாசைகொள்ளாதே" என்று, தடுத்துவிட்டனர்; அவரது "இடத்தை", நாகபுரி பல்கலைக்கழகத் துணைவேந்தரும், மத்தியப்பிரதேச சபாநாயகருமான பண்டித குஞ்சிலால்பேவுக்கு ஒதுக்கினர், தலைவர்கள். போட்டியிட விரும்பிய தொண்டரை, அபேட்சையை வாபஸ் வாங்கிக் கொள்ளுமாறும் வற்புறுத்தினர். தான் 'ஜே!' போட்ட தலைவர்கள், தன்னை இவ்விதம் ஏளனப்படுத்துவது, அந்த ஏழைத்தொண்டரின் உள்ளத்தைக் கலக்கி, உயிரையே போக்கிக் கொள்ளச் செய்து விட்டது.

'தேவதைகள்' தன்னை ஏளனப்படுத்துவது, இதுதான் முதல் தடவையல்ல அத்தொண்டருக்கு—கடந்த ஆண்டில் டில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டுக்குப் பிரதிநிதியாகச் செல்ல விரும்பினர். அப்போதும், இதே குஞ்சிலால்பேக்காக(பேய், அல்ல!) விட்டுக்கொடுக்க நேர்ந்ததாம். அண்மையில் நடக்கவிருக்கும் ஐதராபாத்மாநாட்டுக்குப் பிரதிநிதியாகச் செல்ல விரும்பி, அபேட்சா பத்திரம் தாக்கல் செய்தால், சென்ற ஆண்டில் எவருக்காக விட்டுக் கொடுத்தாரோ, அவரைக் காட்டியே, வற்புறுத்தினராம் விலகிக் கொள்ளும்படி. இந்தக் காட்சி, ஏழைத் தொண்டரின் உள்ளத்தில் ஈட்டியைச் சொருகியிருக்கிறது! "ஏழைக்கு இடமில்லை. உண்மைத் தொண்டனுக்கு இடமில்லை. பட்டாடைக்கும் சொகுசுக்கும் தான் காங்கிரசில் மதிப்பு." என்று, நொந்து கொண்ட அந்த வீரர், தன்னைச் சாகடித்துக் கொண்டிருக்கிறார்.

"காங்கிரஸ் கட்சி, பணபீடத்தின் ஆதிக்க மேடையாகி விட்டது. ஆளும் கட்சி இன்று, அது. அதனால் அரசியல் சூதாடிகள் வண்டு போல மொய்க்கின்றனர். எனவே, உண்மைத் தொண்டன் உதாசீனம் செய்யப்பட்டு விட்டேன். இந்த சதிக்கூடாரம் தேவையில்லை!"

என்று, காங்கிரசை விட்டு விலகியிருக்கலாம், சூதுமதியினரின் சூழ்ச்சிகளை வெளிப்படுத்துவதில் தனது மீதி நாட்களைக் கழித்திருக்கலாம். ஆனால், தடியடி தாங்கி, தான் வளர்த்த கட்சியை இழக்க விரும்பாத அத்தொண்டர் தன்னையே 'இழந்து' விட்டார்! சாகடித்துக்கொண்டிருக்கிறார்!!

அத்தொண்டர் தன்னை மாய்த்துக்கொண்டது, கட்சியில் இடம் கிடைக்காததற்காகத்தானே யொழிய, ஆட்சி அதிகாரம் அகப்படாததற்காகவல்ல. கட்சியில் இடம் வேண்டினர் — இருபது ஆண்டுகளுக்குமேலாக தான் செய்த சேவையின் பலனாக. ஆனால், அதுவும் கிடைக்கவில்லை! கட்சியை நடாத்திச் செல்லும் பொறுப்பை விரும்பினர். அது, கிடைக்கவில்லை. காரணம், அந்தக் கட்சியின் கொள்கைகளை வகுக்கும் பீடத்திலமர்ந்திருக்க, தொண்டர்களுக்கு இடமளிக்க விரும்பவில்லை, தலைவர்கள். கொடி தூக்கவும், ஜே போடவும் தான் அவர்கள் தேவைப்படுகிறார்கள் ஆனால், கொள்கைகளை வகுக்கும் கூடாரத்துக்கு 'கண்ணுக்கு குளிர்ச்சியானோர்' தேவைப்படுகிறார்கள். சரியாகச் சொன்னால், கொள்கைகளை வகுக்கும் கூடாரத்துக்குள் புக கண்ணுக்கு குளிர்ச்சியானோரே, துடிக்கிறார்கள் — பண பலத்தைக் காட்டினார்கள்—எவ்விதமாயினும் இடம் பெற்றுவிட வேண்டுமென்று துடிக்கிறார்கள். இந்தப் பதைப்பும், துடிப்பும் இந்த் தனதனவான்களுக்கேற்படும் காரணம், தேசீயக் கட்சி இன்று ஆளும் கட்சியாக அமர்ந்திருப்பது தான். பழுத்த மரம்! வௌவால்கள் பறந்து வருகின்றன!! ஆனால், மரத்தைக் காத்து நீர் ஊற்றி, வளர்த்தவன் பிணமாகிறான் — மரம் வௌவால்களின் கொட்டத்தால் சீரழிவதைக்கண்டு அந்தப் பிணங்களில் ஒன்றுதான், தொண்டர் ஜகன்னாத சாஸ்திரியினுடையது. அவர் பிணமானர்! ஆனால், நடைப்பிணங்களாகக் கண்ணீர் சிந்தியவண்ணம் கட்சிக்குள் குமுறிக்கொண்டிருப்போர் தொகை ஏராளம்!! மத்யப் பிரதேசத்தில்மட்டுமல்ல, இந்திய உபகண்டமெங்குமே, தேசீய மரத்தை நோக்கித் தாவிப் பறப்பதெல்லாம் வௌவால்கள் தான். இல்லையென்றால், இராமநாதபுரம் ராஜாக்களும், வடபாதிமங்கலங்களும், முத்தையாக்களும் காங்கிரசின் தூண்களாவார்களா! ஜகன்னாத சாஸ்திரி, பண்டித நேருவிடம் வைத்த பாசத்தின் காரணமாகத் தனது கடிதத்தை அனுப்பச் சொல்லிவிட்டு தற்கொலை செய்து கொண்டார் — "பொது வாழ்வில் சேவை செய்யும் ஆசையுள்ள என்னை நிராகரிக்கிறார்கள். சமயசஞ்சீவிகள் இடம் பிடிக்கிறார்கள். ஆகவே, சாகிறேன்" என்று தெரிவித்து. இந்தச் சாவும், கடிதமும் சாதாரணமானதல்ல! ஆனால், என்ன செய்யமுடியும் நேரு? பாம்புகள் சூழ்ந்திருக்க அவைகளை ஆட்டிப் படைக்கும்பிடாரன் நிலைதானே அவருடையது! நேருமட்டுமல்ல, இன்றைய காங்கிரசை நடத்திச் செல்லும் எவரும், எதிர்கால சரிதாசிரியர்களின் கண்டனத்தைத்தான் பரிசாகப் பெறுவார்கள். அவ்வளவு சீர்கேடு அடைந்து விட்டது, காங்கிரஸ். அந்த அலங்கோலத்தை விளக்குவதுதான் ஜகன்னாத சாஸ்திரி பிணமான, கட்டம்.

★

அறிவிப்பு

எனது தம்பியென்று சொல்லிக்கொண்டு, யாரோ ஒருவன், கழகத் தோழர்களிடம், வீட்டில் கோபித்துக்கொண்டு வந்துவிட்டதாகவும், தனக்கு தங்க இடம், சாப்பாடு, பணம் தந்தால் ஊர்போய்ச் சேர்வதாகவும் கூறி ஏமாற்றி வருவதாகவும் தெரிகிறது. இதுவரை, மதுரை உடுமலைப்பேட்டை, ஆத்தூர், பட்டுக்கோட்டை ஆகிய இடங்களிலிருந்து தகவல்கள் வந்துள்ளன. எனக்கு அத்தகைய தம்பி யாரும் இல்லையென்பதைக் கழகத் தோழர்களுக்குத் தெரிவிப்பதுடன், அப்படி யாரேனும் ஏமாற்றினால், உடனே, போலீசுக்குத் தகவல் கொடுத்து, ஏமாற்றுக்காரனுக்குத் தக்க தண்டனை அடையச்செய்ய வேண்டுகிறேன்.

அன்பன்,
தில்லை. வில்லாளன்

1-ம் பக்க தொடர்ச்சி

அந்தக் காட்சியைக்காணும் நேரத்தில், நமது தாயகத்து கடை வீதிகளிலே திண்டு திமாசுகளுடன் கால்களை அகட்டிப் போட்டுக் கொண்டு அமர்ந்திருக்கும் மார்வாடிகளை, கொஞ்சம் எண்ணிக் கொண்டால் போதும். 'வடநாடாவது — தென்னாடாவது', என்று வாய்ஜாலம் வீசுகிறார்களே, அவர்களை ஒரு முறை அழைத்துச் சென்று காட்டினால் போதும்! பிறகு, வாய்திறக்க மாட்டார்கள். அவ்வளவுதூரம் உழைக்கிறார்கள், நம்மவர்! 'எண்ணெய்' குடித்த 'போண்டாக்களை'க் கொஞ்சம் கையில் வைத்துப் பிழிந்தால் எப்படியிருக்கிறதோ, அதுபோலக் காட்சி யளிக்கிறார்கள் — அழகு அழகான ஆடைகளைத் தயாரித்துவிட்டு வெளியேறும் தோழர்கள். இந்தக் காட்சியினை அகமதாபாத், தந்தது. பம்பாயிலோ, கேட்கவேண்டாம்! சாக்கடைமேல் உலவும் கொசுக்களை விட மோசமான இடம், ஒதுக்கப்பட்டிருக்கிறது— நம்மவருக்கு. இடத்தின் பெயர் தாராவி. மலபார்ஹில்ஸையும், மாதுங்காவையும் கண்டுவிட்டு தாராவிக்குச் சென்றால் போதும்—சமதர்மக் கொள்கை 'சனாதனி' மனதிலும் இடம் பெற்று விடும்! மாட மாளிகைகள், கூடகோபுரங்கள், பறக்கும் கார்கள், பன்னிறமங்கையர், பளபளக்கும் ஆடைகள் ஆலவட்டம் சுற்றுவதுபோல அமர்ந்திருக்கும் ஆலையரசின் தலைநகரிலே— தாராவி, ஓர் புழுதிமேடு! அங்கே, கோழிக் கூண்டுகளாகயிருப்பவைதான், நம்மவரின் இருப்பிடங்கள்!!

தென்னாட்டுக்கு விஜயம் செய்த பண்டித நேரு அவர்கள், "மதராசிகள் வடநாட்டில் வந்து சுரண்டுகிறார்கள்!" என்றாரே, அது முழுக்க முழுக்க உண்மை. எவரும் மறுக்க முடியாது. ஆமாம்! கண்ணாரக் கண்டேன், நான். நம்மவர் சுரண்டத்தான் செய்கிறார்கள்! சுரண்டினால்தான, தாராவியிலிருப்போர், வாழ முடியும். அவர்கள் எதைச் சுரண்டுகிறார்கள் தெரியுமா? மிருகங்களின் தோலை! தோலைச் சுரண்டி பதப்படுத்தும் தொழில்தான், அங்கு வாழ்வோரில் பலரது பிழைப்பு. அந்த இடங்களை நான், கண்ணாரக் கண்டேன். கண்ணில் நீர் வழிய நானும் நாண்பர் மு. கருணாநிதியும், என். வி. நடாராசனும், கண்ணதாசனும் கண்டோம்! மனம் துடிக்கக் கண்டோம்!!

அவ்விதம் சுரண்டி வாழ்வோரின், வீடுகளைத்தான் கோழிக் கூண்டுகள் என்றேன். உடாமனத்துக்கு அல்ல; உண்மையில், அவ் ரிதர்தான் அவைகள் உள்ளன. வேதனையும், வாழ்க்கைப் புயலும், பக்கத்தில் பரந்து கிடக்கும் 'சாக்கடலும்' (சாக்கடை நிறைந்த அந்த ஜலப்பகுதிக்கு நண்பர் கருணாநிதி தந்த பெயர் இது) அதிலிருந்துமோதும் அருமையான நாற்றமும்தான், நம்மவர் உழைத்துப் பெறும் பரிசுகள்!

இவ்விதம் நம்மவர், அங்கே!

கழகத் தோழர்களுக்கு முக்கிய அறிவிப்பு

"திராவிட நாடு" இதழில் துணை ஆசிரியராகப் பணியாற்றுவதாகச் சொல்லிக் கொண்டு, எஸ். பி. சாரதி என்ற பெயருடன் ஒரு நபர் கழகத் தோழர்கள் பலரிடம் ஏமாற்றிப் பணம் பெற்று வருவதாகத் தெரிகிறது. இவ்விதம் ஏமாற்றும் நோக்கத்துடன் வரும் தோழர்களை போலீசார்வசம்ஒப்புவிக்கும்படி கழகத் தோழர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகி.

ஆனால், அவர்களோ, இங்கே 'ஆலையரசர்'களாகப் பவனி வருகிறார்கள்!!

பரந்த நிலப்பரப்பையே ஆளுமளவுக்கு வளர்ந்துவிட்ட, இந்த பண அரசைப்பற்றி, உலக ஞான முள்ளோர் சிந்திக்காமலிருக்க முடியாது.

அதிலும், அவ்விதம்வளர்ந்திருப்போர்தான், இன்றைய காங்கிரஸ் கட்சியின் மூலபலம் என்று அறியும்போது, கூர்ந்து சிந்திக்கத்தான் வேண்டும்.

முதலாளித்துவம், ஒரு மோகினி பென்பார்கள்! அதனை, 'பண அரசை'க் காணும் சந்தர்ப்பம் பெற்றோர், நன்றாக உணரலாம். இல்லையென்றால், "கையால் நூற்று, ஆடைகட்டுவோம்" என்று போதனை செய்த காந்தியடிகளுக்கு மலர்மாலைகள் சூட்டிக்கொண்டே, அவரது 'பக்தர்'களாகக் கூறிக்கொண்டே, எவ்விதம் இத்தகைய 'ஆலையூர்களை' அமைத்திருக்கமுடியும்? இன்று, அந்தக் காந்தியடிகளின் கட்சியை ஆட்டுவோராகவும் இருக்கமுடியும்?

காந்தியடிகள், 'வெள்ளையனுக்கு, இந்தியா ஒரு மார்க்கெட்டா?' என்றார். 'லங்காஷயரும் மான்செஸ்டரும் கொள்ளையடிக்க சும்மாவா இருப்பது நாம்?' என்று முழக்கினார்—சுதேசி போராட்டம் துவக்கினார். அவைகளைக் கேட்கவும் ஆதரிக்கவும் தயங்காத வடநாட்டு அதிபர்கள், வெள்ளையன் ஆடைகளைத் தீயிடும் நேரத்தில், வேகவேகமாக ஆலைகளைக் கட்டிக்கொள்ளத் தவறவில்லை. அவைகளை, அதிகரிக்கவும், தயங்கவில்லை. அதற்கான ஒப்பந்தங்களை வெளிநாட்டவருடன் செய்து கொள்ளவும் தாமதிக்கவில்லை. மஞ்சள் ஏகாதிபத்தியம் மலர்ந்தது— வெள்ளை ஆதிபத்யத்துடன் கை குலுக்கியவண்ணம்.

நெசவாலை சரித்திரத்தைக் கண்டால், இந்திய உபகண்டத்திலேயே நெசவுமில் முதன் முதலில் ஏற்பட்ட இடம் கல்கத்தா; ஆண்டு 1818. ஆனால், முதன் முதலில் இந்திய முதலாளி ஒருவரால் நெசவாலை கட்டப்பட்டது, 1854-ல் பம்பாயில்தான். அதுமுதல், வளர்ந்தது. தேசியக் காங்கிரசின், 'அந்நியப் பொருள்கள் பகிஷ்கரிப்பு இயக்கம்' நடந்தபோது, தனது நிலைமையை வலுப்படுத்திக்கொண்டது. இந்திய உபகண்டத்திலிருக்கும் 421 ஆலைகளில் பாதிக்கு மேற்பட் பம்பாய் மாகாணத்தில்தான் இருக்கின்றன. இந்த மொத்த ஆலைகளில் ரூ. 50-கோடி மூலதனம் போடப்பட்டிருக்கிறது—ரூ. 100 கோடிக்கு மேல் வரவு செலவு, நடைபெறுகிறது.

இத்தகைய 'பணத் தோட்டம்', பம்பாயில்! தோட்டத்தைச் செழிப்பிக்கும் பாங்கிகள், இன்ஷூரன்ஸ் கம்பெனிகளும் அங்குதான்!! இவ்வளவு செழிப்பாகயிருக்கும் வடவர் பூமிக்காகத்தான், டில்லி, வாதாடுகிறது.

ஆலையரசும், பணத்தோட்டமும் செழிப்புற்றிருக்கிறது, அங்கே. ஆனால், வறுமையும், கைத்தறியும் நிரந்தரமாக விளங்குகிறது இங்கே.

அங்கே—ஆலைகள் வளர்ந்த அளவுக்கு இங்கே, வளரவில்லை!

அவர்கள் அமைத்துக்கொண்ட அளவுக்கு 'பணத்தோட்டம்' இங்கே, ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை!

ஆதலால், பண்டைய கைத்தறித் தொழில் இங்கே இருக்கிறது. அந்தத் தொழிலைச் செய்து வயிற்றைக் கழுவவேண்டியவர்களாக லட்சோபலட்சம் மக்கள் இருக்கிறார்கள். அவர்களுடன், மோதுகிறது, ஆலையரசு! எவ்விதம் தாக்குப்பிடிக்க முடியும்?

"கைத்தறிகள் மட்டும்தான் சென்னை மாகாணத்தில் இருக்கிறதோ? மில்கள் எத்தனை உண்டு தெரியுமா! கோவைக்கும் மதுரைக்கும் சென்றுபார்!"—என்று, பதில் கூறமுனையலாம், டில்லியின் தூதுவர்கள். உண்மை! சென்னை மாகாணத்திலும் ஆலைகள் உள்ளன.

அந்த விபரத்தைப் பாருங்கள்:

மொத்தம் 'இந்தியா' முழுமையும்	416
சென்னையில் மட்டும் (மைசூர்—திருவிதாங்கூர் உள்பட)	79
பம்பாயில் மட்டும்	209

சென்னையையும் பம்பாயையும் ஒப்பிடும்போது, மலைக்கத் தோன்றும். ஆனாலும் சென்னையில் 69 ஆலைகளிருக்கிறதாமே! என்று, சிலரை எண்ணத்தூண்டும். அவ்விதம் எண்ணம் கொள்வோர், தயவு செய்து, இந்த விபரத்தைச் சிறிது கவனிக்கவேண்டும்.

முதலில் இருப்பது சென்னை. இரண்டாவது இருப்பது பம்பாய்.

பரப்பு ச. மைலில்	மக்கள்தொகை
127 (ஆயிரம்)	5 கோடி
79 (ஆயிரம்)	2¼ கோடி

சென்னையைவிட பாதியளவு இருக்கும் பம்பாயில் ஆலைகளின் தொகை 209 சென்னையிலோ, 79 ஆலைகள் தான். இவ்வளவு ஆலைகளிருந்தாலும் பம்பாயில் உற்பத்தி செய்யப்படும் துணி எவ்வளவு, இதர ராஜ்யங்களில் உற்பத்தி செய்யப்படும் துணி எவ்வளவு என்பதைக் கீழே காணுங்கள்.

பம்பாய்—2433.7 (மிலியன்களும்)
இதரராஜ்யங்கள் 1470.7 (மிலியன்)

இந்திய உபகண்ட முழுவதிலும் இருக்கும் ஆலைகளில் பாதிக்குமேற்பட்ட ஆலைகள் பம்பாயில். அதே போல, இரண்டு மடங்கு துணி உற்பத்தியும் பம்பாயில். இவ்விதம் ஆடைகளை நெய்து குவிக்கின்றனர், ஆலையரசர்கள்! 79 ஆலைகள் இருக்கும் சென்னை மாகாணத்தில் மொத்தம் உற்பத்தியாகும் துணி அளவு என்ன தெரியுமா?

இதர ராஜ்யங்களில் — 3788 (மிலியன்களும்)
(பம்பாய் உள்பட)
சென்னையில்மட்டும்-115 (மிலியன்)

76 ஆலைகளிலிருந்தாலும் சென்னை ராஜ்யத்தில் உற்பத்தியாகும் துணியின் அளவு, அனைத்திந்தியாவுடனும் ஒப்பிடும்போது மிக மிகக் கொஞ்சம்! ஆலைகள் 76 இருக்கின்றனவேயொழிய, வேட்டி தயாரிக்கும் ஆலைகள் தொகை மொத்தம் 15 தான் (2 திருவாங்கூரில் 2 மைசூரில் இருப்பதும் உள்பட.) பதினைந்தே ஆலைகள்தான் வேட்டி தயாரிப்பவை! மீதமுள்ள ஆலைகள் யாவும் நூல் தயாரிப்பவை!!

அதனால்தான், சென்னை மாகாணத்தில், நூல் உற்பத்திமட்டும் அதிகமாயிருக்கிறது. அந்த நூலைக் கொண்டு கைத்தறியாளர்கள் தமது வயிற்றை வளர்க்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆனால், அந்த நூலையும் பிடுங்கிக்கொண்டு'தானம்' வழங்குகிறது, டில்லிபீடம்.

அவ்விதம் செய்யும் டில்லிதான், இப்போது கைத்தறிக்காரர்களுக்கு சலுகை வழங்கமறுக்கிறது. தனது நாட்டவர் தயாரிக்கும் இலட்சக்கணக்கான கஜ துணிகளை விற்கும் 'மார்க்கெட்'டாக இருக்கும் தென்னாட்டை இழக்கச் சம்மதிக்கவில்லை! ஏறுமாறான உத்தரவைப் போடுகிறது!!

அதனை விளக்கத்தான் சென்னையில் உற்பத்தியாகும் துணியின் அளவையும், வடநாட்டில் உற்பத்தி செய்யப்படும் அளவையும் புள்ளி விபரங்களோடு காட்ட விரும்பினேன்.

ஐந்து கோடி மக்கள் வாழும் பரந்த நிலப் பரப்பினைச் சுரண்டுவதில், டாடாவும், டால்மியாவும், பிர்லாவும், தேசாயும், ஆர்வமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஆதரவாக, வடநாட்டுப் பீடமும் வழிவகை செய்து தருகிறது.

ஆனால், நம்மவரோ, பிறந்த நாட்டில் வாழவியலாது வடநாடுகளுக்குச் சென்று, தோலைச் சுரண்டுகிறார்கள், ஆலைகளில்!!

வளர்ந்தோங்கி நிற்கும் ஆலையூர்களைக் கண்டபோதும், இந்த விசித்திரம் தான், இதயத்தைத் துடிக்கச் செய்தது. ஆகா! எவ்வளவு பெரிய பண அரசு, வடக்கில். ஐயோ! எவ்வளவு பெரிய 'பள்ளம்' தெற்கில்.

"அரங்கண்ணல்"

பராசக்தி மலர்

வெற்றிகரமான 60-ம் நாளை முன்னிட்டு 16—12—52ல் வெளிவரும் மலர் திரைக்கதை வசனம் முழுவதும்கொண்டு பத்திரிகாசிரியர்கள், அறிஞர்கள், கலைஞர்கள், டைரெக்டர்கள், பிரமுகர்கள் ஆகியோரின் கருத்துரைகளும், தமிழ், மலையாள, கன்னட பத்திரிகைகளின் பாராட்டுரைகளும், எதிர்ப்புகளுக்கு மறுப்பும் தாங்கி ஏராளமான படங்களுடன் வெளிவரும்.

பானுபிரதர்சாரின் அழகிய மூவர்ண அட்டையுடன்,

விலை அணு 12.

வியாபாரிகளுக்கு கழிவு 25%

போர்வாள் அலுவலகம்,
பவழக்காரத்தெரு, சென்னை.

மு. கருணாநிதி

நீண்ட சுற்றுப் பிரயாணங்களின் காரணமாக உடல் நலிவேற்பட்டிருப்பதால், டிசம்பர் மாதம் முடிய எந்தக் கூட்டங்களிலும் சொற்பொழிவாற்ற முடியாத நிலைமையிலிருப்பதால். இந்த மாதம் முழு ஓய்வுக்குப்பின் ஜனவரி முதல்தான் கூட்டங்களில் கலந்து கொள்ள இயலுமெனத் தோழர் மு. கருணாநிதி அறிவித்துக்கொள்கிறார்.

மறுமணம்

145-ெந. வேளியூர் தி. மு. க. செயற்குழு உறுப்பினரான தோழர் ஆ. மா. பாலகிருட்டிணனுக்கும், விதவையாயிருந்த தோழியர் தேவகிக்கும், 4—12—52-ல் காஞ்சீபுரம் சப்ரிஜிஸ்டரார் ஆபீசில் பதிவுத் திருமணம் நடந்தேறியது.

1953 காலண்டர்கள்

அழகிய ஆர்ட் காகிதத்தில், கண்கவர் வர்ணங்களில் அச்சடிக்கப்பட்டது!

அண்ணா, நெடுஞ்செழியன், அன்பழகன். கருணாநிதி, சிற்றரசு, மதியழகன், சம்பத், கே. ஆர். இராமசாமி. பாரதிதாசன். ஆசைத்தம்பி, சௌந்தரபாண்டியன்மற்றும்பலரது அழகிய படங்கள் நிறைந்தது.

தி. மு. க. புத்தக வெளியீடு நிலையங்கள், பத்திரிகை நிலையங்கள், மாவட்டக் கழகங்கள் முக்கியஸ்தர்களின் விலாசத்துடன்.

குறிப்பு:— மாதத்திற்கோர் படம் வீதம் 12 படங்கள் அடங்கியது.

ஒரு காலண்டர் விலை அணு 8. வணிகர் கழிவு ஒரு காலண்டருக்கு 25% வீதம் தரப்படும். குறைந்தது 6 காலண்டர்களுக்காவது ஆர்டர் செய்ய வேண்டும். தேவையான காலண்டர்களுக்கு கழிவு நீக்கி முன்னதாக பணம் அனுப்பவேண்டும் அல்லது தேவையை குறிப்பிட்டால் V. P. மூலம், அனுப்பப்படும். மாதிரி காலண்டர் வேண்டுவோர் 0—9—6 அணு தபால் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

அழகு நூல் இல்லம்,
பாட்டர்ஸ் தெரு,
கெல்லீஸ் சென்னை—10.

பம்பாய் தி. மு. க. ஆண்டு விழா

"அன்புள்ள தோழி புனிதை,

............போர்ப்பறை தினமும் ஒலிக்கிறது. கேட்டதும், நாட்டுப் பாசம் பிறக்கிறதடீ. என் அண்ணன் இரு நாட்களுக்கு முன் போர்ப் பறை கேட்டு ஓடினர். தமிழைக் காக்கும் போரில் தரையை முத்த மிட்டார்.

நேற்று என் துணைவர் செந்தமிழ்க் கொடி ஏந்தி செந்நீரில் நீந்தினர்.

நாளையும் போர்ப்பறை கேட்கும். என் கவலை 'நாளை யாரை அனுப்புவது?' என்பதுதான். 'போருக்குப் போடா மகனே!' என்று கூறும் பேறு நான் இன்னும் பெறவில்லை.

ஆயினும் எட்டுமாத கரு சுமந்து நானே நாளை களத்தில்குதிப்பேன்; கொடி ஏந்திச் செல்வேன். மீளுவது பற்றிக் கவலை இல்லை. என்னை மறந்துவிடாதே.

கார்முகில்"

*

பம்பாய் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், தாங்கள் நடத்தும் "முயற்சி" எனும் ஏட்டுப் பிரதியைத் தந்தபோது, பிரித்துப் பார்த்தேன். 'புறம்' என்ற தலைப்பில் தீட்டப்பட்ட இந்தக் கடிதம் தான் கண்ணில் தென்பட்டது. 'சைக்ளோஸ்டைல்' இயந்திரத்தால், மேற்படி கையேட்டுப் பிரதியை நடத்துகிறார்கள், தோழர்கள். அந்தப் பிரதியையும் அதில் தீட்டப்படும் கருத்துக்களையும் காணும்போது, நமது கொள்கைகளில் அந்த இளைஞர் குழாத்துக்கு இருக்கும் ஆர்வத்தின் அளவை நாம் அறிந்து கொள்ளலாம். அவ்வளவு அருமையான தொண்டர்கள்! ஆயிரம் மைல்களுக்கு அப்பால் சென்று நமது கழக முரசத்தை ஒலிக்கும் அவர்களுடைய தீரத்தை மெச்சாதார் யாரிருக்க முடியும்? சிங்கத்தின் குகையிலே சிந்துபாடுகிறார்கள், தோழர்கள்! அதிலும் எவ்வளவு அமைப்பு முறைகள் தெரியுமா? நவம்பர் 29-ந்தேதி நண்பகல் மு. கருணாநிதி, என். வி. நடராசன், கண்ணதாசன், நான் ஆகியோர் தாதர் புகைவண்டி நிலையத்தில் இறங்கினோம். "வாழ்க பொதுச் செயலாளர்! அடைந்தே தீருவோம் திராவிடநாடு!!" என்ற முழக்கம் எழுப்பிய வண்ணம் 300-க்கு மேற்பட்ட தோழர்கள் திரண்டிருந்தார்கள். அவர்களை ஒழுங்குபடுத்திய வண்ணம், 50-க்கு மேற்பட்ட போலீஸ் பட்டாளம் ஒன்றும் நின்று கொண்டிருந்தது. 'ஒதுங்குங்கள்! வழி விடுங்கள்' என்று தமிழில் பேசியவண்ணம். அதே நேரத்தில் "வாழ்க அண்ணா! பெறுவோம் திராவிடம்!!" என்று வாழ்த்தொலிகள் முழக்கிய அவர்களைக் கண்டதும் ஆச்சரியப்பட்டோம். அருகிலிருந்த தோழரை அழைத்து விபரம் கேட்டோம். சிரித்தார் அவர்! "இவர்கள் போலீஸ் அல்ல. நமது கழக தொண்டர்ப் படையினர்" என்றார். நமது தொண்டர்களுக்கும் போலீசுக்கும் வித்தியாசம் தெரிய முடியாது! ஏனெனில், பம்பாய் போலீசார் அணிந்திருக்கும் தலைப்பாகைகள் இருநிற வர்ணத்தோடு இருக்கிறது. கருநீலம் — சிகப்பு கலந்ததாக. நமது தொண்டர்படையினர் அணிந்திருக்கும் தலைப்பாகை நமது கொடியைப்போல இருநிறங்களோடு விளங்குகிறது. அதுமட்டுமல்ல, போலீசார் போலவே மக்களைக் கட்டுப்படுத்தி எங்களை அவர்கள் இட்டுச் சென்ற முறையும், ஆச்சரியத்தை உண்டாக்கிற்று. வெளியில் சென்றதும் படைபதைக்கும் வெயிலையும் பாராது திரண்டிருந்த கழகத் தோழர்கள் சார்பில், தாயகத்திலிருந்து வரும் தொண்டர்களாம் எங்களுக்கு, மாலைகள் அணிவித்தார்கள். அன்று மாலை மணி 4-க்கு சயோன் புகைவண்டி நிலயத்திலிருந்து, தொண்டர்கள் இருபுறமும் அணிவகுத்துச் செல்ல மக்கள் வெள்ளம் இதயகீதம் முழக்க, காரில் தாயகத்துத்தொண்டர்களாம் எங்களை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். கூட்டம் நடைபெற விருந்த தாராவி செல்லும் பாதையெங்கும் கழகத்தோழர்கள் கட்டியிருந்த தோரண வளைவுகளும், வழங்கிய அன்பு மலர்களும், வடநாட்டுப் பனியாக் குப்பலின் கண்களில் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் வரவழைத்திருக்கும்! அவ்வளவு பெருமிதமான ஊர்வலம்!!

ஊர்வலம் தாராவியை அடைந்ததும் குட்டிவாடித்திடல் எனும் பரந்த மைதானம் ஒன்றில் அமைக்கப்பட்டிருந்த 'தாளமுத்து-நடராசன்' பந்தலில், பம்பாய் தி. மு. க. வின் மூன்றாவது ஆண்டுவிழா துவங்கிற்று. மைதானம் முழுமையும் விளக்கொளியும், தாய்மார்களுக்கென தனியிடமும், நடுமையத்தில் நடப்பட்டிருந்த கொடிக்கம்பமும் அதைச்சுற்றி வட்டமிட்டு நின்ற கழகத் தொண்டர்களையும் காணக் காண பிரமிப்பாகயிருந்தது. மேடையை அழகுபடுத்தியிருக்கும் முறையினை நோக்கினேன். கண்கள், ஆச்சரியத்தால் மலர்ந்தன! வீட்டுச் சேலைகளைக் கொண்டு விதவிதமான வளைவுகளையும் தோரணங்களையும் ஆக்கியிருந்தனர், வீரர்கள். வியந்தோம் நாங்கள் — அவர்கள் ஆர்வம்கண்டு! அந்த வியப்பைப் பன்மடங்காக்குவதுபோல் திரண்டிருந்தது கூட்டம். பம்பாயிலே பதினாயிரக்கணக்கானோர், நமதுகூட்டத்துக்கு! நாங்கள் இதை எதிர்பார்க்கவில்லை. "ஏதோ! பத்து பதினைந்து ஆர்வமிக்க தோழர்கள் ஒன்று கூடி கழகம் ஏற்படுத்தியிருப்பார்கள். ஆர்வத்தால் நம்மை அழைக்கிறார்கள். போய்வரலாம்! 500 அல்லது 600 பேர்தான் கூடுவர்" என்ற கருத்தில் சென்றவர்கள் நாங்கள். ஆனால், எதிரிலோ, பதினாயிரத்துக்கு மேற்பட்டமக்கள்! 'என்ன திகைப்போடுபார்க்கிறீர்கள்? இன்று சனிக்கிழமை! நாளை ஞாயிறு அன்று நல்ல கூட்டம் இருக்கும்' என்றார் பம்பாய் கழகச்செயலாளர் நெல்லைச் செழியன்..பலருக்கு ஓய்வுகிடைக்கவில்லையாம்!—வருத்தத்தோடு தெரிவித்தார், அவர். 'சரிதான்' என்று, தலையை ஆட்டினேன், நான். தோழர் கே. எஸ். நடராசன், திராவிடப் பண்பாட்டு தோழர் த. மு. பொற்கோ எழுந்து வரவேற்புரை நடைபெறும் என்று அறிவிக்க ஆர்வமிக்க ஒரு உருவம் எழுந்து நின்று வரவேற்புரை ஆற்றிற்று. அவர் பெயர் எஸ். தியாகராசன். வீரமும் ஆர்வமும் கலந்த அவரது வரவேற்புரைக்குப்பின் நெல்லைச்செழியன் தலைமையில் ஆண்டுவிழா துவங்கிற்று. தோழர் என். வி. நடராசன் கழகத் தொண்டர்படை அணிவகுத்து மரியாதை செய்ய கழகக் கொடியினை ஏற்றுவித்ததும் கவிஞர் கண்ணதாசன் சொற்பொழிவாற்றினர். பிறகு தோழர் என். வி. நடராசன், பேசினர். முதல் நாள் நிகழ்ச்சி முடிந்தது. மறுநாள்காலை 10 மணிக்குத் தோழர்கள் வந்து எங்களை அழைத்தனர். 'எங்கே?' என்றோம். 'ஊழியர் கூட்டத்துக்கு!' என்று சொல்லி, தாராவியிலிருக்கும் திராவிட முன்னேற்றக்கழக அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றனர். தோழர் பி. எஸ். வள்ளிநாயகம் தலைமையில் நடைபெற்ற ஊழியர் கூட்டத்தில் தோழர் மு கருணாநிதியும் என். வி. நடராசனும் கழகம் எவ்விதம் பணியாற்ற வேண்டும், கழக வீரர்களின் கடமையென்ன என்பதை விளக்கினார்கள். பிறகு இந்த ஆண்டிற்கு அதிகப்படியான கழக உறுப்பினர்களைச் சேர்த்துத் தந்த உ. அ. செல்லையா, இரா. தஞ்சைத்துரை, எஸ். எஸ். பிச்சையா ஆகிய தோழர்களுக்கும் கழக ஆக்க வேலைகளுக்கான நன்கொடை வசூலில் அதிகப்படியான நன்கொடை திரட்டித்தந்த இரா. தஞ்சைத்துரை பொன். திரு. சபாபதி, சி. த. மு. ஆரியசங்காரன் ஆகிய தோழர்களுக்கும் தோழர் மு. கருணாநிதியால் கழகத்தின் சார்பில் பரிசுகள் வழங்கப் பட்டன. அன்றுமாலை 5–30 மணிக்கு விழாக்கூட்டம், தாளமுத்து நடராசன் பந்தலில் நடைபெற்றது. கடந்த ஆண்டில் தாங்கள் சாதித்த பலகாரியங்களையெல்லாம் விளக்கும், ஆண்டு அறிக்கையை அவர்கள் படித்துக் காட்டியபோது, நமது தோழர்களின் செயலாற்றும் வன்மை வெளிப்பட்டது! "தலைமைக் கழகம் இட்ட தாக்கீதுகளை நிறைவேற்றத் தயங்கியதில்லை நாங்கள். மாவீரன் மஜீதுக்காக நிதி தேவையென்றதும் ரூ 50-க்கு மேல் திரட்டியனுப்பினோம்" என்று ஒவ்வொன்றாக, தமது சேவைப் பட்டியலை விளக்கினர். விழாவை வாழ்த்தி தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், காஞ்சி. கலியாணசுந்தரம், சி. பி. சிற்றரசு, முதலிய பலரிடமிருந்து வந்த செய்திகள் படிக்கப்பட்டதும், பலர், தாயகத் தொண்டர்களுக்கு மலர் மாலைகள் அணிவித்து மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். பிறகு, தோழர் அரங்கண்ணல் சொற்பொழிவாற்றினர். கடைசியாகத் தோழர் மு. கருணாநிதி விரிவுரையாற்றினர்—இறுதியாகத் தோழர் எஸ். தியாகராசன் நன்றி கூற விழா, இனிது முடிவுற்றது. விழா முடிந்ததும், மகிழ்ச்சியோடு வந்தார்கள், தோழர்கள் எங்களைச் சூழ்ந்தவண்ணம். "தோழியர் சத்தியவாணிமுத்து இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் வந்து பேசிச்சென்றபின் எங்கள் கழக உறுப்பினர் தொகை 50-லிருந்து 233 ஆக ஆயிற்று. இப்போது இன்னும் அதிகமாகும்!" என்று, புளகாங்கிதத்தோடு கூறினார்கள். கூறியதோடு விடவில்லை, மறுநாள் விடிந்ததும் 'விருந்து' என்றோர் அழைப்பு! இரவில் ஓரிடத்துக்கு!—இவ்விதம் பல இடங்களுக்கு எங்களை அழைத்துச் சென்றார்கள். அதோடு விட்டார்களா? அங்கு வந்து கூடியோரையெல்லாம், உறுப்பினர்களாகச் சேர்த்தார்கள். பின்னால்தான் தெரிந்தது, அவர்கள் ஏற்பாடு செய்த விருந்துகள் எதற்கென்பது! அவ்வளவு ஆர்வத்தோடு பணியாற்றும் அந்த வீரர்களைக் காணக்காண உளம் பூரித்தோம். ஆலைகளில் உழைப்போரும், அலுவலகங்களில் உழைப்போருமாகத் திரண்டிருக்கும் அவர்களிலே பலர், சிறந்த சிந்தனையாளர்கள். கழகத்தின் சார்பாக நடத்தப்படும் கூட்டங்களிலே பேராசிரியர்களையும், உயர்ந்த கல்வி கற்றோரையும் கொண்டுவந்து பேசச்செய்கிறார்கள்! தாராவி மக்களுக்கான சுகாதாரம், குடியிருப்பு வசதி முதலிய பல பொதுக்காரியங்களிலீடுபடவும் செய்கிறார்கள். அத்தகைய ஆர்வம் உள்ள தோழர்களிடம் விடை பெற்றுக் கொண்டு, அகமதாபாத்துக்குக் கிளம்பினோம்.

தேவை!
மெய்விளக்கம் தேவை!!

தமிழ்நாடெங்கும் மழை பெய்தது!—'இது ஆண்டவனின் கிருபை' என்றார் ஆச்சாரியார்.—'ராஜாஜி வந்ததால்தான்!' என்றனர் அவரது சீடகோடிகள்.

ஆனால் மழையைத் தொடர்ந்து......கடுமையான புயல்! தஞ்சை நாசம்! நூற்றுக்குமேல் சாவு! எங்கும் வெள்ளம்! இதயத்தைக் குலுக்கும் கோரம்! இதுவரை கண்டிரா சேதம்!

'இது, யாருடைய கிருபையால்?'—மெய்விளக்கம் தேவை!

"சூரியன் போக்கிலேற்பட்ட கோளாறுதான் காரணம்!"—புயலுக்குப்பின் ஆச்சாரியார் தந்த விளக்கம், இது.

மழைபெய்ததற்கு வேதாந்த விளக்கம்! கோடும் புயலுக்கு விஞ்ஞான விளக்கம்!!

அண்ட சராசரமும் அவனருளால் ஆடுவதாகக் கூறும் ஆச்சாரியார் இவ்விதம் கூறியதேன்?

நன்மைக்கு மட்டும் கடவுள்! தீமைக்கு இல்லையா? 'இல்லை' யென்பதே, அவரது விஞ்ஞான விளக்கம்.

விஞ்ஞானத்தை நாடுவது நாஸ்தீகர் செயலாயிற்றே! அவ்விதமானல் அவர் ஓர் நாஸ்தீகரா?

ஆண்டவன்மீது பக்தியுள்ளதுபோல் பேசும் ஆஷாடபூதியா?—மெய்விளக்கம் தேவை! மெய்விளக்கம் தேவை!!

மோட்டார் வரியை நிறைவேற்றியிருக்கிறது—ஆச்சாரியார் சர்க்கார்.

பலமான கண்டனங்களைப் பொருட்படுத்தவில்லை.

வரிமேல் வரி! வாடும் ஏழைகளை வாட்ட மேலும் ஓர் புதுவரி!!

பணமில்லாததால், இந்தப்புது வரியாம் — பணத்தால் வாழும் டில்லிக்கு அடிமைப்பட்டோர் கூறுகிறார்கள்! நம்மைக் கசக்கிப் பிழிகிறார்கள்!!

இந்த ஆட்சியில் ஏழைகள் வாழ முடியாது — அவ்வளவு வரிகள் அதிகரிக்கின்றன. யாரே, இதனைப் பொறுப்பது?

தேனிக் கலவர வழக்கு நிதி

முன்னைய வரவு	2872—9—10
ப. சுந்திரம், மதுரை	5—0—0
அறிஞர் அறிவகத்தார், மதுரை	1—7—0
அம்பாள்சந்நிதி வர்த்தகத்தொழிலாளர்கள், மதுரை	1—9—3
தி. மு. க., திருக்களாச்சேரி	10—0—0
ஆக	2890-10—1

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.